**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 28.08.2020–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : 27.08.2020 இராசிபுரம் நகராட்சி

**பொருள்கள்**

( 1 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 22, கோனேரிப்பட்டி காட்டுக்கொட்டாய் பொதுக் கழிப்பிடத்தின் பைப் லைன் முழுவதும் பழுதடைந்து அடைப்பு ஏற்பட்டுள்ளதால் புதியதாக பைப் லைன் அமைத்து தண்ணீர் வசதி செய்துதர ஆகும் செலவினம் ரூ. 60000/– மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணியை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/1828/20)

**தீர்மானம் எண். 847**

அனுமதிக்கப்பட்டது.

( 2 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிலுள்ள பழுதடைந்த 8 BOV வாகனத்திற்கு புதிய பேட்டரிகள் பொருத்துதல், மின் மோட்டார் மற்றும் இதரப் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு கடந்த 05.08.2020 அன்று இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலை விவரம் |
|---|---|---|
| 1) | Priyam Industrials Engineering Pvt. Ltd., Tirupur. | ரூ. 280129/– |
| 2) | Arun Indian Motors, Salem | ரூ. 308142/– |

வரிசை எண். 1–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால், அந்நிறுவனமான Priyam Industrials Engineering Pvt. Ltd., Tirupur என்ற நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/2258/20)

**தீர்மானம் எண். 848**

அனுமதிக்கப்பட்டது.

( 3 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிலுள்ள பழைய பிறப்பு, இறப்பு பதிவுகளை ஆன்லைனில் பதிவேற்றம் செய்யும் பணிக்கு கடந்த 05.08.2020 அன்று இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஆன்லைனில் பதிவேற்றம் செய்ய ஒரு பதிவிற்கான விலை. |
|---|---|---|
| 1) | GSC Technology and Service, Komarapalayam | ரூ. 24/– |

| | | |
|---|---|---|
| 2) | Perennial Systems, Salem | ரூ. 25/– |

வரிசை எண். 1–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால், அந்நிறுவனமான GSC Technology and Service, Komarapalayam என்ற நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/1886/20)

**தீர்மானம் எண். 849**

அனுமதிக்கப்பட்டது.

( 4 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 2, கோரைக்காடு ராசி நகர் பகுதிக்கு சேலம் ரோடு ரயில்வே கிராஸிங், முத்துக்காளிப்பட்டி சர்வீஸ் சாலை வழியாக குடிநீர் வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 370000/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணியை அரசு திட்ட நிதி பெற்று மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/2672/20)

**தீர்மானம் எண். 850**

அனுமதிக்கப்பட்டது.

( 5 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் கீழ்காணும் இடங்களிலுள்ள சின்டெக்ஸ் டேங் பழுதடைந்து தண்ணீர் வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

1) வார்டு எண். 7 – நெசவாளர் காலனி – 1
2) வார்டு எண். 8 – இந்திரா காலனி – 3
3) வார்டு எண். 15 – செக்கடி தெரு
4) வார்டு எண். 24 – விநாயகம் தெரு
5) வார்டு எண். 23 – அங்காளம்மன் கோவில் தெரு செக்கு மேடு
6) வார்டு எண். 26 – காட்டூர்

மேற்கண்ட ஆறு இடங்களிலுள்ள சின்டெக்ஸ் டேங் மற்றும் பிளாட்பாரம் முழுவதும் சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 450000/– மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணியை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/2987/20)

**தீர்மானம் எண். 851**

அனுமதிக்கப்பட்டது.

( 6 ) இராசிபுரம் நகராட்சிக்கு தினசரி குடிநீர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பெறப்பட்டு spot Chlorination செய்து சீரான முறையில் குடிநீர் விநியோகம் வழங்க 2020–21–ஆம் ஆண்டிற்கு சோடியனம் ஹைபோ குளோரைடு திரவம் வாங்க உத்தேச செலவினம் ரூ. 800000/– மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணியை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/2988/20)

**தீர்மானம் எண். 852**

அனுமதிக்கப்பட்டது.

( 7 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டிப்பர் லாரி TN 28 AS 0104 என்ற வாகனத்திற்கு தகுதிச்சான்று மற்றும் பழுதுகளை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.30 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (எச்1/2191/20)

**தீர்மானம் எண். 853**

அனுமதிக்கப்பட்டது.

( 8 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் பழைய பேருந்து நிலைய உள் டேங்க் 250mm சுலீஸ் வால்வு கிளாண்ட் மற்றும் வார்டு எண். 19, TVS தெரு 150mm சுலீஸ் வால்வு செக்நட் மற்றும் ராடு மெட்டல் வாங்கி மறைபோட்டு சரி செய்யும் பணிக்கு 25.08.2020 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

1) திரு ர. சுப்பரமணி, ரீவைண்டிங் & எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், 40, குமாரசாமி தெரு, இராசிபுரம் – ரூ. 9700/–
2) திரு ஆர். எஸ். ரங்கசாமி, சத்யா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், 27எ/2, குமாரசாமி தெரு, இராசிபுரம் – ரூ. 9500/–
3) திரு ஆர். ராஜா, குமாரசாமி தெரு, இராசிபுரம் – ரூ. 9650/–

பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு ஆர். எஸ். ரங்கசாமி, ஒப்பந்ததாரர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணியை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/2986/20)‘

**தீர்மானம் எண். 854**

அனுமதிக்கப்பட்டது.

( 9 ) இந்நகராட்சியில் தனியார் தெரு விளக்கு பராமரிப்பு போக மீதமுள்ள 14 வார்டுகளிலுள்ள தெரு விளக்குகள், அலுவலக வளாகங்கள், நகராட்சி கழிப்பிடங்கள், பேருந்து நிலையம் மற்றும் மேல்நிலைத் தொட்டி வளாகங்கள் ஆகியப் பகுதிகளிலுள்ள மின் விளக்குகளை ஓராண்டிற்கு பராமரிப்பு செய்ய தேவையான மின் பொருட்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 4.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** அ) ஓராண்டு நகராட்சி மின் பொருட்கள் வாங்க ஆகும் செலவினம் ரூ. 4.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/2835/20)

**தீர்மானம் எண். 855**

அனுமதிக்கப்பட்டது.

( 10 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 20, காந்தி நகரில் கட்டப்பட்டுள்ள கழிப்பிடத்திற்கு மின் இணைப்பு பெற உரிய பதிவுக் கட்டணம், மின் அளவு மாணி, காப்பீட்டுத் தொகை மற்றும் இணைப்புக் கட்டணம் ரூ. 9950/– செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியமைக்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** ரூ. 9950/–ஐ மின் இணைப்பு பெற நகராட்சி வருவாய் நிதியிலிருந்து தனி அலுவலர் முன் அனுமதி பெற்று செலுத்தியதற்கு மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

(இ1/2892/20)

**தீர்மானம் எண். 856**

அனுமதிக்கப்பட்டது.

( 11 ) இராசிபுரம் நகராட்சியில் பணிபுரியும் அனைத்து நகராட்சி அலுவலர்கள், இளநிலை உதவியாளர்கள் மற்றும் நகராட்சிக்கு வருகைதரும் பொதுமக்கள் தங்கள் கையில் தேய்க்க சேனிடைசர் தானியங்கி இயந்திரத்தின் மூலம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி சேனிடைசர் அலுவலக இருப்பில் இல்லாத காரணத்தினால் Clean Hand and Sanitizer – 50 கேன் தேவைப்படுவதால், அவற்றை வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 75000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் SDRF கோவிட்–19 நிதி கிடைக்கப் பெறின், அந்நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/3190/20)

**தீர்மானம் எண். 857**

அனுமதிக்கப்பட்டது.

( 12 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்களாக முக உறை, கையுறை, கிருமி நாசினி மருந்துகள், லைசால், பிளீச்சிங் பவுடர் மற்றும் சுண்ணாம்புத்தூள் மற்றும் இதரப் பொருட்களை வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 5.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் SDRF கோவிட்–19 நிதி கிடைக்கப் பெறின், அந்நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/3191/20)

**தீர்மானம் எண். 858**

அனுமதிக்கப்பட்டது.

( 13 ) 2020–21–ஆம் ஆண்டிற்கான இராசிபுரம் நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள், அலுவலக உதவியாளர்கள், செயின்மேன், மகப்பேறு உதவியாளர், டர்ன்காக் மற்றும் பூங்கா காவலர் ஆகிய

பணியாளர்களுக்கு சீருடைகள் வாங்கவும் மற்றும் அதற்குரிய தையல் கூலியும் வழங்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ. 3.50 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
**2)** மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
**3)** சீருடை துணிகளை வசந்தம் கோ–ஆப்டெக்ஸ், ஈரோடு என்ற அரசு நிறுவனத்திடம் வாங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/3192/20)

**தீர்மானம் எண். 859**

அனுமதிக்கப்பட்டது.

**( 14 )** இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் நகர பொது மக்களுக்கு பரவாமல் தடுக்கும் பொருட்டு, நகர பொது மக்களுக்கு கொரோனா வைரஸ் கோவிட்–19 நோய் தடுப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு, அறிவிப்புகள் அச்சகத்தில் அச்சிடும் பணிக்கு கடந்த **19.08.2020** அன்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| **வ.எண்.** | **அச்சக நிறுவனத்தின் பெயர்** | **அச்சடிக்க படிவம் 1–இன் விலை** |
|---|---|---|
| 1) | தமிழன் ஆப்செட் பிரிண்டர்ஸ், எருமப்பட்டி | ரூ. 1.50 |
| 2) | அன்பு ஆப்செட் பிரிண்டர்ஸ், நாமக்கல் | ரூ. 1.80 |
| 3) | கண்ணன் பிரிண்டர்ஸ், ரெட்டிப்பட்டி | ரூ. 2.00 |

வ.எண். **1–**இல் குறிப்பிட்டுள்ள அச்சக நிறுவனத்தினர் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதால், தமிழன் ஆப்செட் பிரிண்டர்ஸ், எருமப்பட்டி என்ற நிறுவனத்தினரின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/868/20)

**தீர்மானம் எண். 860**

அனுமதிக்கப்பட்டது.

**( 15 )** இராசிபுரம் நகராட்சி பாரதிதாசன் சாலை நடுநிலைப் பள்ளி கட்டடம் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையிலுள்ளது. மேற்படி பழுதடைந்த மங்களூர் ஓடு கூறை அமைந்துள்ள கட்டடத்தினை இடிக்க சேலம் அரசு பொறியியல் துறை பேராசிரியர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதன்படி, பழுதடைந்த பள்ளி கட்டடத்தினை இடித்து அப்புறப்படுத்தவும், ரூ. 40.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் கட்டவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. பணிகளுக்கான செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** அ) ரூ. 40.00 இலட்சம் மதிப்பீட்டிற்கான நிர்வாக அனுமதி வழங்கலாம்.
ஆ) பணிக்கான செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(இ1/1749/19)

**தீர்மானம் எண். 861**

அனுமதிக்கப்பட்டது.

**( 16 )** இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் TN 28 V 9848 மற்றும் குடிநீர் லாரி TN 28 Z 7294 முறையே **14.07.1998** மற்றும் **25.04.1996** அன்று வாங்கப்பட்டது. இவ்வாகனங்கள் வாங்கப்பட்டு முறையே **22 & 24** ஆண்டுகள் முடிந்துவிட்டது. மேற்படி ஈப்பு வாகனம் TN 28 V 9848 நவம்பர் **2016** வரை இயக்கப்பட்டது. மற்றும் குடிநீர் லாரி TN 28 Z 7294 மார்ச் **2015** வரை இயக்கப்பட்டது. எனவே, இயங்கா நிலையிலுள்ள இவ்வாகனங்களை கழிவு நீக்கம் செய்யவும் இதற்கான உரிய முன்மொழிவுகளை நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பவும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/2673/20)

**தீர்மானம் எண். 862**

அனுமதிக்கப்பட்டது.

**( 17 )** இராசிபுரம் நகராட்சி பழைய பேருந்து நிலைய வளாகத்திலுள்ள **1972**–ஆம் ஆண்டில் கட்டப்பட்ட பழைய கடைகள், தங்கும் விடுதி, நகராட்சி வார்டு அலுவலகங்கள் மற்றும் பொருட்கள் வைப்பறை கட்டடங்கள் தற்போது பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளன. எனவே, மேற்காணும் கட்டடங்களை இடித்துவிட்டு, பழைய பேருந்து நிலைய வளாகத்தில் நவீன வணிக வளாகம் அமைத்து நகராட்சிக்கு வருவாயினை மேம்படுத்துதல் அவசியமாகிறது. மேலும், புதிய பேருந்து நிலையத்தில் பழுதடைந்த கடைகளை தற்காலிகமாக சரிசெய்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, புதிய பேருந்து நிலையத்தில் நவீன கடைகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்படி பணியினை செய்ய திட்ட அறிக்கை தயாரிக்க நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாததால், விரிவான திட்ட அறிக்கைகள் (DPR) மற்றும் திட்ட வடிவமைப்பு வரைபடங்கள் தயார் செய்ய கலந்தாலோசகர் (consultant) நியமனம் செய்யவும், தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் (TNIDB) திட்டத் தயாரிப்புத் தொகையிலிருந்து திட்ட அறிக்கைகள் மற்றும் வடிவமைப்புகள் தயார் செய்து வழங்கவும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு, கலந்தாலோசகர் நியமனம் செய்து தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரிய திட்ட தயாரிப்பு தொகையிலிருந்து விரிவான திட்ட அறிக்கை மற்றும் வடிவமைப்புகள் தயார் செய்ய கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/3151/20)

**தீர்மானம் எண். 863**

அனுமதிக்கப்பட்டது.

**( 18 )** இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு பகுதியில் குப்பை எடுத்து சுத்தம் செய்ய பயன்படுத்தப்பட்ட கீழ்க்கண்ட வாகனங்கள் பழுதடைந்து தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் பல ஆண்டு காலம் இருக்கிறது. அதனை கழிவு நீக்கம் செய்யவும் உரிய முன்மொழிவுகளை நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பவும் கீழ்க்கண்டவாறு பணி செய்ய முடிய வாகன விவரம் :

| வ. எண். | வாகன எண் | வாகனத்தின் பெயர் | வாகனம் வாங்கிய தேதி | பயன்படுத்த முடியாமல் நிற்கும் தேதி |
|---|---|---|---|---|
| 1 | TN 28 Z 1327 | லைலேண்டு லாரி | 1991 | 2006 |
| 2 | TN 28 Z 6950 | எஸ்சர் | 1995 | 2006 |
| 3 | TN 28 Z 9355 | சுராஜ் மஸ்தா | 1996 | 2014 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | TN 28 S 1109 | சுராஜ் மஸ்தா | 1998 | 2012 |
| 5 | TN 28 AZ 2073 | மகேந்திரா சேம்பியன் 3 வீல் ஆட்டோ | 2007 | 2012 |
| 6 | TN 28 AZ 0995 | டம்பர் பின் சுராஜ் மஸ்தா | 2007 | 2016 |
| 7 | TN 28 Q 9138 | அபே ஆட்டோ 3 வீல் | 2007 | 2016 |
| 8 | TN 28 AZ 2077 | மகேந்திரா சேம்பியன் 3 வீல் ஆட்டோ | 2007 | 2014 |
| 9 | TN 28 AX 1821 | அபே ஆட்டோ 3 வீல் | 2010 | 2016 |

மேற்கண்ட வாகனங்கள் கழிவு நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/3308/20)

**தீர்மானம் எண். 864**

அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– ஆ. குணசீலன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்(கூ.பொ.),
இராசிபுரம் நகராட்சி.